**இலங்கை கலைகள் மன்றம் - 2015**

---

இலங்கை கலைகள் மன்றத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 44 ஆம் இலக்க இலங்கை கலைகள் மன்ற (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 15(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை கலைகள் மன்றத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03**

கடந்த காலப்பகுதிக்குரிய வழுக்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி குறித்த வகுப்பின் கீழ் பொழிப்பாக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 244,203 பெறுமதியான நிலையான சொத்துக்கள் அவ்வாறு வகைப்படுத்தப்பட்டு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09**

இறுதியிருப்பு, கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டிலும் குறைவான பெறுமதியில் மீள்கணிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், வெளியீட்டு இருப்பின் பெறுமதி அவ்வாறு கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறுதியிருப்பு ரூபா 50,331 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மன்றத்தால் அச்சிடப்பட்டிருந்த 144 புத்தகங்கள் மற்றும் 116 கலை சஞ்சிகைகள் என்பன இறுதியிருப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 314,166 கிரயமான நிலையான சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்படாமையினால் மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு ரூபா 62,833 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) ரூபா 500,000 பெறுமதியான நிலையான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டிற்குரிய வட்டி ரூபா 17,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.

(ஈ) ரூபா 8,222 கிரயமான 20 புத்தகங்களின் பிரதிகள் இறுதி வெளியீட்டு இருப்பிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

விற்பனை செய்க அன்றேல் திருப்பி அனுப்புதல் அடிப்படையில் 04 வருடங்களுக்கு முன்னர் 03 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 26,325 கிரயமான 3 புத்தகங்களின் 90 பிரதிகள் மீள அனுப்பும் காலம் கடந்திருந்த போதிலும் உரிய பணத்தை அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 47 ஆம் பிரிவு | 05 ஊழியர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்காக சேவைதருனர்களின் பங்களிப்பைக் கணிப்பீடு செய்தபோது சம்பளத்திற்குச் செலுத்தப்படுகின்ற உள்ளக படிகளும் கவனத்திற் கொள்ளப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 61,568 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டம் | 2014 செப்தெம்பர் 15 ஆந் திகதி முதல் நிரந்தர சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்த 05 உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை பணிக்கொடை ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757 | மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க மற்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கைகள் | நிலையான சொத்துக்கள் மற்றும் கணனி உபகரணங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

**2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தாபனவிதிக் கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவின் பிரகாரம் தாபனப் பணிப்பாளரினதும் திறைசேரியினதும் முன் அங்கீகாரமின்றி கலாசார

அலுவல்கள் திணைக்களத்தினதும் கலைகள் மன்றத்தினதும் நிரந்தர உத்தியோகத்தர்கள் உப மன்றக் கூட்டங்களுக்கு சமூகமளித்தமைக்காக இரண்டு உத்தியோகத்தர்களுக்கும் இரண்டு ஊழியர்களுக்கும் ரூபா 240,700 கூட்டுத்தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 1952 இன் 18 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் இலங்கை கலைகள் மன்றத்தினை தாபிக்கும் நோக்கில் நன்கொடை மற்றும் உதவியாக அனுசரணை வழங்க முடியுமென ஏற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டிராத போது 2015 ஆம் ஆண்டினுள் 06 கலைஞர்களுக்கு நன்கொடை மற்றும் அனுசரணைக்காக ரூபா 180,000 தொகை மன்றத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவு

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 2,079,427 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 265,829 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,345,256 தொகையான அதிகரிப்புக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வரிசை அமைச்சிலிருந்தான நிதிகளின் பெறுவனவு ரூபா 2,632,200 இனால் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நிதிப் பற்றாக்குறை காணப்பட்ட போதிலும். 2015 ஆம் ஆண்டின்போது நிதி மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எனினும், ஊழியர் சம்பளங்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை முறையே ரூபா 621,535 ரூபா 381,583, ரூபா 292,428 மற்றும் ரூபா 628,994 தொகையான பங்களிப்பு காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின்போது அது ரூபா 4,264,422 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1952 இன் 18 ஆம் இலக்க கலைகள் மன்ற அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நுண் கலை தொடர்பான பரந்த அறிவு, அனுபவம் மற்றும் செயலான்மையை விருத்தி செய்து, இலங்கை மக்களின் கலைச் செயற்பாடுகளைக் கொண்டு செல்வதை விருத்தி செய்தல் நுண் கலைச் செயற்பாடுகளை முன்னேற்றுதல் இலங்கைக்கே உரித்தான கலைகள் மற்றும் நிர்மாணங்களின் அபிவிருத்தியை உறுதிப்படுத்துதல், ஊக்குவித்தல் மற்றும் அக்கறை கொள்ளச் செய்தல் மற்றும் மேற்கூறப்பட்ட நோக்கங்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புடைய எந்த விடயமாக இருந்த போதிலும் அரசாங்கத் திணைக்களம், பிரதேச அதிகார சபைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குதல் என்பன மன்றத்தின் பிரதான நோக்கங்களாக இருந்தன.

(ஆ) எனினும் மன்றத்தினால் மேற்கூறப்பட்ட (அ) இல் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து செல்வதற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின்போது 07 ரசனையூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கலை சஞ்சிகைகளை அச்சிடுவதற்கு பாதீட்டில் ரூபா 1,570,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 436,000 தொகை செலவில் 03 ரசனையூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

(ஈ) முறையான திட்டமொன்றின் பிரகாரம் மன்றத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக செயற்படுவதற்கு மன்றம் தவறியிருந்ததுடன் மீண்டெழும் செலவினங்களைச் செய்வதற்காக வரிசை அமைச்சிலிருந்து வழங்கப்படுகின்ற நிதியை மன்றத்தின் நோக்கங்களின் ஈடுபடுத்துவது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின்போது வாரியபொலயில் நடைபெற்ற உள்நாட்டுக் கலைஞர்களை இனங்காணல் மற்றும் ஊக்கமளிக்கும் செயலமர்விற்காக ரூபா 83,598 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அதன் அடிப்படை நோக்கங்கமான வடமேல் மாகாணத்தின் கலைஞர்களின் பெயர்ப்பட்டியலொன்றைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்தின் இணையத்தளத்தை பேணிச் செய்வதற்காக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கு மீளாய்வாண்டில் ரூபா 13,250 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், இணையத்தளத்தை நாளதுவரையாக்கல் இடம்பெற்றிருக்கவில்லை.

### 4.3 பதவியணியின் நிர்வாகம்

இலங்கை கலைகள் மன்றத்தின் பதவியணியினரில் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரை உள்ளடக்கிய 6 பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு 2011 ஆகஸ்ட் 26 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் (மன்றத்தின் செயலாளர்) பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அதற்காக 2014 ஆம் ஆண்டு முதல் கலாசார அலவல்கள் திணைக்களத்தின் உத்தியோகத்தரொருவர் பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

மன்றத்தினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஎடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவு மற்றும் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிராததுடன் வரிசை அமைச்சினாலும் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5.4 கொள்வனவுத் திட்டம்**

2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தினால் மீளாய்வாண்டின் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே கவனத்திற் கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | - | சில ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு பெறுமானத்தேய்விடப்படாமை மற்றும் பணிக்கொடை ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படாமை |
| (ஆ) | இருப்புக் கட்டுப்பாடு | - | புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளுக்காக இருப்புப் பதிவேடு பேணப்படாமை, இருப்பை இனங்காணல் மற்றும் கணக்கீடு செய்லதில் நலிவுகள் |
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | - | பாதீடு சிறப்பாகத் தயாரிக்கப்பட்டு கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாமை |
| (ஈ) | நிதிய முகாமைத்துவம் | - | மன்றத்தின் நிதி நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தப்படாமை |
| (உ) | கொள்வனவு | - | நிறுவனத்திட்டம் தயரிக்கப்படாமை மற்றும் திட்டத்தின் பிரகாரம் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை. |